Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
C.M.P.NO.8466/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கண்ணன் | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | ஜோலார்பேட்டை | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 13 th day of October 2022.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரிவு 200 கு.வி.மு.ச. ன் படி விசாரணை.-**

**நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சர்வே எண் 66 / 6 சி. – 25 செண்ட், 66/6 டி– 8 செண்ட், 66 –31 செண்ட், 66/3 ஏ, 66 /2 – 8 செண்ட் கொண்ட மொத்தம் 69 செண்ட இடங்கள் எனது பூர்விக சொத்தாகும். அது எனது தந்தைக்கு வாய்மொழியான பாக பிரிவினை மூலம் 1973 ம் வருடம் கொடுக்கபட்டது. மேற்படி சொத்துக்கள் சம்மந்தமாக எனது சித்தப்பா சீனு அசல் வழக்கு எண் 5/2013 திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த சூழ்நிலையில் எனது சித்தப்பா சீனு, அவருடைய மகள் அருள்மொழி, மகன் தனசேகரன், சந்திரசேகர், ராஜேந்திரன், விநாயமூர்த்தி, கலையரசி மற்றும் எங்கள் ஊர் பெரியோர்கள் பாப்பான்னன், பிரகாசம் ஆகியோர்கள் சேர்ந்து 15.03.2021 ல் சமரசமாக போக வேண்டும் என்று பேச்சு வார்த்தை நடத்தினார்கள். நானும் சமரசத்திற்கு ஒப்புக்கொண்டு சமரச மனுவில் கையொப்பம் செய்து, அதை மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்தோம். அதன் படி அந்த வழக்கு 29.03.2021 ல் சமரச மனுவின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. 15.04.2021 அன்று மீண்டும் மேற்படி நபர்கள் என்னிடம் வந்து, எனது தந்தைக்கு கொடுக்கபட்ட 69 செண்ட் நிலத்தை அவர்கள் எடுத்துக்கொள்வதாகவும், அவர்களுடைய நிலமான சர்வே எண் 66/4 ஏ–6 செண்ட், 66/4 பி– 3 செண்ட், 66/4 சி– 27 செண்ட், 66/4 டி–12 செண்ட்,**

66/13– 3 1/2 சென்ட் ஆக மொத்தம் 69 சென்ட் நிலத்தை எனக்கு கிரையமாக கொடுப்பதாக பேசினார்கள். அதற்கு என்னிடம் கூடுதலாக ரூ.2,70,000/– கேட்டார்கள். 29.04.2021 அன்று நாள் நன்றாக உள்ளதாவும், அன்று பத்திரங்களை பதிவு செய்துக்கொள்ளலாம் என்று என்னிடம் கூறினார்கள். பணத்தை அன்றைய தேதி பாப்பான்னன் மற்றும் பிரகாசம் ஆகியோர்கள் முன்னிலையில் எனது சித்தப்பா சீனு அவர்களிடம் கொடுத்துவிட்டேன். ஜோலார்பேட்டை பத்திரம் எழுத முடியாத என்று கூறிவிட்டதாகவும், அதனால் திருப்பத்தூரில் உள்ள சரவணன், ரமேஷ் ஆகியோர்களிடம் பத்திரம் எழுதி கொள்ளாலம் என்று தெரிவித்தார்கள், நானும் ஒப்புக்கொண்டேன். மாதிரி பத்திரத்தை தயார் செய்த பிறகு என்னிடம் படித்து காட்டினார்கள். சரியாக இருந்ததால் நான் அதற்கு ஒப்புக்கொண்டேன். பிறகு அசல் பத்திரங்களை தயார் செய்து, ஜோலார்பேட்டை சார் பதிவாளர் அலுவலத்தில் 29.04.2021 ல் பதிவு செய்தார்கள். பதிவு செய்தற்கு ரசீது என்னிடம் கொடுத்தார்கள். என்னுடைய நகல் பத்திரத்தை கேட்டபோழுது இரண்டு நாட்களில் தருவதாக கூறினார்கள். நான் வெளியில் சென்றதால் 4 நாட்கள் கழித்து சார் பதிவாளர் அலுவலகம் சென்று கேட்டேன். அங்கு அவர்கள் ஏற்கனவே பத்திரங்களை வாங்கிவிட்டு சென்றுவிட்டதாக கூறினார்கள். ரசீது என்னிடம் இருந்தபோதும் பத்திரத்தை எவ்வாறு கொடுத்தீர்கள் என்று கேட்டதற்கு, பத்திரம் எழுதுபவரிடம் சில சமயங்களில் கொடுத்துவிடுவார்கள் என்று கூறினார்கள். பத்திரம் எழுதிய ரமேஷ் என்பவரை நான் போன் மூலம் தொடர்புக்கொண்டேன். அதற்கு தனசேகர் என்பவரிடம் பத்திரம் உள்ளதாகவும், அதை பெற்றுக்கொள்ளுமாறு என்னிடம் தெரிவித்தார். நான் மேற்படி தனசேகரனிடம் பத்திரம் கேட்டு சென்றேன், அவரும் பத்திரத்தை என்னிடம் கொடுத்துவிட்டார். அதை நான் படித்து பார்கையில், அதில் 11 ம் பக்கம் இல்லாமல் இருந்தது. பிறகு தொடர்ந்து படிக்கையில் 16 வது பக்கத்தில் சர்வே எண் 66/4 ஏ என்ற சொத்து அடிக்கப்பட்டிருந்தது. பின்பு வரிசை எண்களும் திருத்தம் செய்யபட்டிருந்தது. கடைசியல் மொத்த கூட்டல் மட்டும் மாற்றம் செய்யாமல் இருந்தது. மீண்டும் ஆவணத்தை எடுத்துக்கொண்டு சார் பதிவாளர் அலுவலகம் சென்று கேட்டேன். அப்பொழுது மேற்படி சர்வே எண் 66/4 ஏ என்ற சொத்தானது தருமன் என்பவர் பெயரில் உள்ளதாகவும், அதை மேற்படி நபர்கள் எனக்கு எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றும் தெரிவித்தார்கள். மேலும் பத்திரம் எழுதிய ரமேஷ் என்பவரிடம் தெரிவித்து விட்டதாகவும் கூறினார்கள். நான் அதன்பிறகு ரமேஷ் அவர்களை சென்று பார்த்தேன். அதற்கு அவர் அந்த பத்திரத்தை தான் எழுதவில்லை என்றும், என்னை யார் என்றே தெரியாது என்றும்,

எது பேச வேண்டுமென்றாலும் எனது சித்தப்பா மகன் தனசேகரனிடம் சென்று பேசிக்கொள்ளுமாறும் சொல்லிவிட்டார். இதற்கு மேல் பேசினால் உன்னை அடித்துவிடுவேன் என்றும் மிரட்டினார். அதனால் எனது ஊர் பெரியோர்களான பாப்பான்னன் மற்றும் பிரகாசம் அவர்களிடம் சென்று தெரிவித்தேன். அதற்கு நாங்கள் பேசி பார்க்கிறோம் என்று கூறினார்கள். நானும் பலமுறை அவர்கள் வீட்டிடம் சென்று கேட்டேன். அதற்கு அவர்கள் சரிவர பதில் சொல்லவில்லை. பின்பு 04.12.2021 அன்று நான் சென்று எனது வழக்கறிஞரை பார்த்து அறிவிப்பு அனுப்பினேன். அதை அவர்கள் வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். கடைசியாக 17.07.2022 அன்று அவர்கள் வீட்டிற்கு சென்றபோது, தனசேகர், ராஜேந்திரன் ஆகியோர்களிடம் கேட்டேன். அதற்கு தனசேகரன் நீ ஒழிந்தால் பிரச்சனை தீரும் என்றும், தேவிடியா பையா, உங்கம்மா என்று அசிங்கமாக பேசினார்கள். வேறு வழியின்றி தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்.

**புகார்தாரர் தரப்பு ஆவணங்கள்**

1) 29.04.2021 தேதியில் எனது சித்தப்பா சீனு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் பு.த.சா.ஆ.1 ஆகும்.

2) 29.04.2021 தேதியில் அருள்மொழி 1 முதல் 7 எதிரிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு ரசீது நகல் பு.த.சா.ஆ.2 ஆகும்.

3) 04.12.2021 தேதியில் நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பு.த.சா.ஆ.3 ஆகும்.

4) ஜோலார்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல்அட்டை பு.த.சா.ஆ.4 ஆகும்.

5) 9ம் எதிரி சரவணன் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல்அட்டை பு.த.சா.ஆ.5 ஆகும்.

6) 1 முதல் 7 வரையான எதிரிகள் அறிவிப்பை வாங்க மறுத்து திருப்பி அனுப்பிய தபால் உறை (எண்ணிக்கை 7) பு.த.சா.ஆ.6 ஆகும்.

Signature of Witness.